**விவசாயக் கடன் திட்டம்: செல்போன் மூலம் பணப் பரிமாற்றம் செய்யும் முறை அறிமுகம்**

First Published : 03 Oct 2011 03:17:47 AM IST



சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசுகிறார் இந்திய ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் (மும்பை) கே.சி.சக்கரவர்த்தி. உடன் (இடமிர

சென்னை, அக். 2: விவசாய கடன் திட்டத்தில் விவசாயிகள் செல்போன் மூலம் பணப் பரிமாற்றம் மேற்கொள்ளும் திட்டத்தை பல்லவன் கிராம வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் கே.சி.சக்கரவர்த்தி, நபார்டு வங்கித் தலைவர் பிரகாஷ், இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டி.எம்.பாசின், பல்லவன் கிராம வங்கித் தலைவர் ஜி.ரங்கராஜன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கிசான் அட்டையை கொண்டு விவசாயிகள் வங்கிகளில் காத்து நிற்காமல் தேவையான இடு பொருட்களை வாங்க செல்போன் மூலம் பணப் பரிமாற்றம் மேற்கொள்ளும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் முதன் முதலாக பல்லவன் கிராம வங்கியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த நபார்டு வங்கி நிதியுதவி அளித்துள்ளது. இந்தத் திட்டத்தைப் பயன்படுத்த விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும். அப்போது விவசாயிகளுக்கு நான்கு இலக்க ரகசிய எண் வழங்கப்படும். அவ்வாறு பதிவு செய்த விவசாயிகள் தங்களது செல்போன் மூலம் வங்கியைத் தொடர்பு கொண்டு தங்களுக்கு தேவையான உரம், விதைகள், விவசாய கருவிகள், பூச்சி மருந்து உள்ளிட்ட பொருட்களை பதிவு பெற்ற விற்பனையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதனால் கால விரயத்தைத் தடுப்பது மட்டுமின்றி விவசாயிகள் எளிதாகத் தங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் இருந்து தேவையான பொருட்களை பெற முடியும். அப்போது

விவசாயி கணக்குகளில் இருந்து விற்பனையாளர் கணக்குக்கு எளிதாகப் பணப் பரிமாற்றம் ஆகிவிடும். விழுப்புரம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என கூறினர்.

**கருகும் நாற்றுகளை காக்க தண்ணீர் திறக்க வலியுறுத்தல்**

First Published : 02 Oct 2011 12:06:32 PM IST

தஞ்சாவூர், அக். 1: ஊரணிபுரம் பகுதியில் சாகுபடிக்கு போதிய தண்ணீர் இன்றி நாற்றுகள் கரும் நிலை உள்ளதால், கல்லணைக் கால்வாயிலிருந்து உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் கோ. நீலமேகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

கல்லணைக் கால்வாயில் ஊரணிபுரம் பிரிவு வாய்க்கால், அலிவலம் வாய்க்கால், காயாவூர் வாய்க்காலில் வரும் தண்ணீரை நம்பியே இந்தப் பகுதியில் உள்ள சுமார் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்த வாய்க்கால்களில் கடந்த 15 நாள்களுக்கும் மேலாக போதிய தண்ணீர் திறந்து விடப்படாததால், நடவுக்காக தயார் செய்த நாற்றுகளைப் பறித்து நடவு செய்ய இயலாத நிலையும், நாற்றங்காள்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் நாற்றுகள் கருகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். எனவே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு, இந்தப் பகுதி வாய்க்கால்களில் கூடுதல் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**நாட்டு கோழி வளர்ப்பு: வேலைவாய்ப்புப் பயிற்சி**

First Published : 02 Oct 2011 11:46:19 AM IST

காரைக்குடி, அக். 1: குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் நாட்டுக் கோழி வளர்ப்புப் பற்றிய சுயவேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கப்பட உள்ளதாக, அதன் தலைவர் வெ. பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்குநரகம் மூலம், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் நாட்டுக் கோழி வளர்ப்புப் பற்றிய ஒரு மாத கால சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். பயிற்சிக்கான கட்டணம் ரூ. 1000. பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் குன்றக்குடியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவரை நேரில் சந்தித்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் பெற 10.10.2011 கடைசி நாளாகும். மேலும் விவரங்களுக்கு, 04577-264288 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரும்பு நடவு தொடக்க விழா**

First Published : 02 Oct 2011 01:51:34 PM IST

போளூர், அக். 1: போளூரை அடுத்த கரைப்பூண்டி தரணி சர்க்கரை ஆலையின் 2011-12-ம் ஆண்டு கரும்பு நடவு தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

ஆத்துரை அடுத்த செய்யானந்தல் கிராமத்தில் விவசாயி கன்னியப்பன் நிலத்தில், ஆலையின் துணை மேலாளர் (கரும்பு நிர்வாகம்) சுப்புராமன் கரும்பு நடவுசெய்து தொடங்கி வைத்தார். உடன் உதவி கரும்பு அலுவலர் சுப்பிரமணியன், கரும்பு உதவியாளர்கள் ஞானவேல், சங்கர் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**தேயிலை ஏலத்தில் உயர்ந்தது விலை : 13.38 லட்சம் கிலோ விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2011,03:49 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில், பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள், அதிகளவு தேயிலை தூளை வாங்கியதால் விலை உயர்ந்தது.

நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், வாரந்தோறும் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்கப்படுகிறது. விற்பனை எண் 39க்கான ஏலம் இந்த வாரம் நடந்தது; 12.44 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது. இலை ரகம் 8.93 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.51 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் அதிகளவு தேயிலை தூளை வாங்கினர்.

உள்நாட்டு வர்த்தகத்தில், ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப், மகாராஷ்டிரா மாநில வர்த்தகர்கள், அதிகளவு தேயிலை தூளை வாங்கியதால், விற்பனைக்கு வந்த தேயிலை தூளில், 92 சதவீதம் தீர்ந்தது. அனைத்து ரக தூளுக்கும், கிலோவுக்கு 3 ரூபாய் வரை அதிகரித்தது. சிடிசி., ரக தூளில், கோத்தகிரி ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலையின் தூளுக்கு, கிலோவுக்கு அதிகபட்சம் 142 ரூபாய் கிடைத்தது; 75க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் கிலோவுக்கு, 100 ரூபாய்க்கு மேல் பெற்றன.

ஆர்தோடக்ஸ் ரகத்தில், சாம்ராஜ் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோவுக்கு அதிகபட்சம் 206 ரூபாய் கிடைத்தது; 35க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள், 100 ரூபாய்க்கு மேல் பெற்றன. இலை ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 45-49, சிறந்த ரகத்துக்கு 80-125, டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 48- 54, சிறந்த ரகத்துக்கு 80-125 ரூபாய் கிடைத்தது. விற்பனை எண் 40க்கான ஏலம், வரும் 6, 7ம் தேதிகளில் நடக்கிறது; 13.38 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு உள்ளது.

**மண்புழு உரங்களை பயன்படுத்த வலியுறுத்தல் : விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2011,00:18 IST

தர்மபுரி: வேளாண் சாகுபடியில் இயற்கை உரமான மண்புழு உரங்களை அதிக அளவில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை: விவசாயிகள் அதிக அளவில் ரசாயன உரங்களையும், பூச்சிகொல்லிகளையும் பயன்படுத்திவருவதால், மண்ணின் தன்மை, மண்ணிலுள்ள உயிர்கள், நீரின் தரம் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் ஆகியவை பாதிப்படைந்துவருகிறது. விவசாயிகள் கால்நடை மற்றும் விவசாய கழிவுகளை கொ0ண்டு இயற்கை உரம் தயாரிப்பது குறைந்துவருகிறது. மேலும், செயற்கை உரங்கள் உடனடியாக கிடைப்பதாலும், கையாளுவது எளிதாக உள்ளதாலும் அவற்றை உபயோகிக்கும் அளவு அதிகமாகிவிட்டது. தமிழகத்தில் தற்பொழுது உரங்களின் உபயோகம் சுமார் 9.90 லட்சம் டன்கள். இந்த உர தேவையை பல்வேறு உற்பத்தியின் மூலம் வெளியேறும் கழிவிலிருந்தே பூர்த்தி செய்துகொள்ளலாம்.

வேளாண் கழிவுகள், நகரக் கழிவு மற்றும் கிராமக் கழிவில் இருந்து 5.4 லட்சம் டன் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து கிடைக்கும். மேலும், எளிதில் மக்ககூடிய கால்நடை கழிவு, பண்ணை கழிவு, காய்கறி கழிவு ஆகியவற்றை மண்புழுவுக்கு உணவாக கொடுத்து மண்புழு உரங்கள் தயாரித்து விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும். மண் புழு உரங்களை விவசாயிகள் தயாரித்து விவசாயத்துக்கு பயன்படுத்தினால், கூடுதல் மகசூல் பெறலாம். ரசாயன உரங்களை தவிர்க்கவும், சுற்றுசூழலை பாதுகாக்கவும் இயற்கை உரங்களுக்கு விவசாயிகள் மாறவேண்டும். அதன்படி, மண்புழு உரம் தயாரிக்க மழைநீர் புகாதவாறு கூரை அமைக்கப்பட்டு, காற்றோட்டமான இடத்தில் தேவைக்கு ஏற்ப மண்புழு உரக்கூடம் அமைக்க வேண்டும்.

மண்புழு உரத்தொட்டியில் எறும்புகள் செல்லாத வகையில், தொட்டியை சுற்றி சிறய நீர் கால்வாய்களை அமைக்க வேண்டும். எலி, பாம்பு, தவளை ஆகியவை தொட்டிக்குள் செல்லாத வகையில், தொட்டியின் மேற்புறத்தில் வலை அமைக்க வேண்டும். மண்புழுவுக்கு உணவளிக்கும்போது, நன்கு மக்கிய உணவினை தொட்டியின் மேல்விளிம்பிலிருந்து இரண்டு அங்குலம் குறைவாக நிரப்ப வேண்டும். தொட்டியினுள் 40 சதம் ஈரப்பதம் காப்பது அவசியம். தொட்டியில் ஒரு சதுர மீட்டர் பரப்புக்கு ஒரு கிலோ என்ற வீதம் மண்புழுக்களை விட வேண்டும். மண்புழு தொட்டில் விடப்பட்ட ஏழு முதல் 14 நாட்கள் கழித்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இரண்டு அங்குலத்துக்கு மிகாமல் உணவுப்படுக்கையின் மேல் உள்ள குருணை வடிவலான புழு எச்சங்களை மட்டும் தனியாக சேகரிக்கவும். பிரிக்கப்பட்ட மண்புழு உரத்தினை மூன்று மில்லி மீட்டர் கண்கொண்ட சல்லடைகளில் சலித்து பாலித்தீன் காகிதம் ஒட்டப்பட்ட அடாமிகு பாலி எத்திலின் பைகளில் அடைத்து இருட்டான அறையில் 40 சதம் ஈரப்பதத்தில் ஒளி படாதவாறு வைக்க வேண்டும்.

மண்புழு உரத்தில் சுமார் 1.5சதம் தழைச்சத்தும்,0.5 சதம் மணிச்சத்தும், 0.8 சதம் சாம்பல் சத்தும் மற்றும் கரிமப்பொருட்களும் உள்ளது. மண்புழு உரத்தினை வயல்வெளியில் தெளிக்கும்போது, பயிர்கள் 30 சதம் வரை கூடுதல் மகசூல் தரும். மண்புழு உரங்கள் கூடுதல் விலை என்பதால், விவசாயிகள் சொந்தமாக மண்புழு உரங்களை தயாரித்து தங்களது வயல்வெளியில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்கலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கொப்பரை மார்க்கெட் திடீர் சரிவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2011,02:14 IST

பொள்ளாச்சி : வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை உயரும் என காத்திருந்த நிலையில், விலை சரிந்து வருவதால் விவசாயிகள், கொப்பரை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 24ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 57 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,245 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 87 ரூபாயும் விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 16 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 17 ஆயிரத்து 200 ரூபாய் வரையிலும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து சென்னைக்கு அனுப்பும் உணவுத்தேவைக்கான இளம் தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரத்து 500 ரூபாய் விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 10.25 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 8.50 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது.நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோ 53 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,150 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 85 ரூபாயும் விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரத்து 500 ரூபாயும், உணவு தேவைக்கான இளம் தேங்காய் டன்னுக்கு 14 ஆயிரத்து 300 ரூபாயும் விலை கிடைத்தது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 8.75 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 8.00 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது.கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை விலை சரிந்து விட்டது. ஆயுதபூஜை சீசனுக்கு தேங்காய், கொப்பரை விலை உயரும் என எதிர்பார்த்து காத்திருந்த நிலையில், விலைச்சரிவு அதிர்ச்சி அளிக்கிறது. இந்த விலைச்சரிவு தற்காலிகமானது,' என்றனர்.

**ஏலக்காய் விலை உயர்வு**

First Published : 02 Oct 2011 12:24:57 AM IST



புது தில்லி, அக்.1 : திருமணம், விழாக் காலங்களையடுத்து வாசனைப் பொருள்களில் ஒன்றான ஏலக்காயின் விலை கிலோவுக்கு ரூ.10 உயர்ந்துள்ளது.

நவராத்திரி, தீபாவளி என அடுத்தடுத்து பண்டிகைகள் வரவுள்ளன. அத்துடன் திருமண காலமும் தொடங்கியுள்ளது. இதையடுத்து ஏலக்காய்க்கான தேவை சந்தையில் அதிகரித்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் ஏலக்காயை அதிக அளவில் வாங்கி வருகின்றனர். ஏலம் விளையும் பகுதிகளிலிருந்து அதன் வரத்து குறைவாக

உள்ளது. இதன் காரணமாக ஏலக்காயின் விலை உயர்ந்து வருகிறது. சனிக்கிழமை நிலவரப்படி, கிலோவுக்கு ரூ.10 அதிகரித்து 570-590 விற்பனையானது. முதல் தரம் விலை கிலோவுக்கு ரூ.780-880 ஆக இருந்தது.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *செல்போன் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் விழுப்புரம் மாவட்டத்தில் அறிமுகம்*




விவசாயிகளுக்கு செல்போன் மூலம் கடன் வழங்கும் திட்டம் குறித்து ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் கே.சி.சக்ரபர்த்தி பேட்டி அளித்த போது எடுத்தபடம். அருகில் இந்தியன் வங்கியின் தலைவர் டி.எம்.பாசின், நபார்டு வங்கியின் தலைவர் பிரகாஷ் பக்ஷி, பல்லவன் வட்டார வங்கி தலைவர் ஜி.ரங்கராஜன் ஆகியோர் உள்ளனர்.

*சென்னை, அக்.3–*

*விவசாய கடன் அட்டை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு செல்போன் மூலம் கடன் வழங்கும் திட்டம் விழுப்புரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

*செல்போன் மூலம்...*

*விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கும் பல்லவன் வட்டார வங்கிக்கு, செல்போன் மூலம் விவசாய கடன் அட்டை திட்டத்தை செயல்படுத்த நபார்டு வங்கி ரூ.44.66 லட்சம் நிதியுதவி*

வழங்கியுள்ளது. இதன் மூலம் கடன் அட்டைதாரர்களுக்கு, பண்ணை சார்ந்த உரப்பொருட்களை அவர்களது வீட்டிலேயே வழங்கும் வங்கி சேவை வசதிகள் செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தை இந்தியன் வங்கி, பல்லவன் வட்டார வங்கி மற்றும் தொழில் நுட்ப வசதியை வழங்கும் பேமேட் நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் கடன் அட்டை வைத்திருக்கும் விவசாயிகள் தங்கள் வீட்டில் இருந்து கொண்டே செல்போன் மூலம் வங்கி பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.

செயல்முறை விளக்கம்

இந்த திட்டம் குறித்த செயல்முறை விளக்க கூட்டத்தை சென்னையில் நபார்டு வங்கி மற்றும் பல்லவன் வட்டார வங்கி இணைந்து நடத்தியது. இந்த கூட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் கே.சி.சக்ரபர்த்தி, இந்தியன் வங்கியின் தலைவர் டி.எம்.பாசின், நபார்டு வங்கி தலைவர் பிரகாஷ் பக்ஷி, பல்லவன் வட்டார வங்கி தலைவர் ஜி.ரங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விளக்கங்களை அளித்தனர்.

நபார்டு வங்கியின் தலைவர் பிரகாஷ் பக்ஷி பேசும்போது, "இந்த புதிய தொழில் நுட்பத்தின் மூலம் வங்கிகள் சிறந்த கடன் சேவையை விவசாயிகளுக்கு வழங்குவதோடல்லாமல், எந்த நேரத்திலும் வங்கி சேவைகளை பெற முடியும். வங்கி செலவுகளும் குறையும்" என்றார்.

பல்லவன் வட்டார வங்கி தலைவர் ஜி.ரங்கராஜன் கூறும்போது, "இந்த திட்டம், விவசாய கடன் அட்டைதாரர்கள், பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்களிடம் இருந்து உரம், விதைகள், பூச்சி மருந்து மற்றும் விவசாய கருவிகளை வாங்கவும், பழுதடைந்த கருவிகளை பழுது பார்க்கவும் முடியும். இந்த திட்டத்தை செயல்படுத்த நபார்டு வங்கி ரூ.44.64 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் சுமார் 5 ஆயிரம் கடன் அட்டைதாரர்களுக்கு, 3 ஆண்டுகளுக்கு வங்கி சேவை வசதிகளை பெற்று தர முடியும்" என்றார்.

வங்கி கணக்குகள்

ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் கே.சி.சக்ரபர்த்தி கூறும்போது, 'அடுத்த 5 ஆண்டுகளில் விவசாயிகள் வங்கிகளில் கணக்குகளை அதிகமாக வைத்துக்கொண்டால், இந்த திட்டத்தை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியும். விவசாயிகளுக்கு மிகப்பெரிய அளவில் பயனளிக்கும் வகையில் அமையும்' என்றார்.

இந்த கூட்டத்தில் வங்கிகளின் உயரதிகாரிகள் மற்றும் கிளை மேலாளர்கள், விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த அனைத்து வங்கிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தின் முடிவில் இனி வரும் ஆண்டுகளில் இந்திய அளவில் இந்த திட்டத்தை சிறப்பான முறையில் கொண்டு செல்ல ஆலோசிக்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

நிகழ்ச்சி நிறைவில், நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் லலிதா வெங்கடேசன் நன்றி கூறினார்.